International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 03 Issue: 01 January to March 2021 www.irjtsjournal.org

# இலங்கையில் சிறுவர் துஸ்பிரயோகம் : இதனை தடுப்பதற்கான வழிவகைகளும் விழிப்பூட்டலும் பற்றிய சமூக நோக்கு

எம். பகீரதி
*முதுநிலை விரிவுரையாளர்*
*சமூகவியல் மற்றும் மானிடவியல் துறை*
*கலை கலாசார புலம்*
*கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்:**

இலங்கையில் பல்வேறுபட்ட சமூகப்பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றில் முக்கியமானதொரு பிரச்சினையாக சிறுவர் துஸ்பிரயோகம் காணப்படுகிறது. இந்நிலை தொடருமானால் எதிர்கால சமூகம் சீரழிந்துவிடும். எனவே இதனைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து, விழிப்பூட்டல்களை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதன்காரணமாக எம்மால் மேற்கொள்ளப்பட்ட சமூக நோக்கிலான கள ஆய்வுகளின் அடிப்படையில்இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** *சிறுவர், துஸ்பிரயோகம், சிறுவர் உரிமைகள், விழிப்புணர்வு, சமூகம்*

**அறிமுகம்:**

இலங்கையில் சிறுவர் துஸ்பிரயோகம் என்பது மிகமுக்கியமானதொரு சமூகப்பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. ஆகவே அதனை தடுப்பதற்கான முயற்சிகள் செய்யப்பட வேண்டும். அவ்வாறான முன்னெடுப்புகளுக்கான ஒரு விழிப்பூட்டலாக இக்கட்டுரையின் உள்ளடக்கம் அமைகிறது. அதற்கேற்ப சிறுவர் துஸ்பிரயோகம் இடம் பெறும் நிலமைகள்,சிறுவர் துஸ்பிரயோகத்தை ஒழிப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள்,சிறுவர் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்,விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் வெகுஜன ஊடகங்களின் பங்களிப்பு ஆகிய விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**சிறுவர் துஸ்பிரயோகம் இடம் பெறும் நிலமைகள்:**

சிறுவர் துஸ்பிரயோகம் என்பதற்கு ஹென்றி கெம்பி(Hentry Kempi) என்பவர் ‘தவிர்க்கக்கூடிய சாதாரண விருத்திப் போக்கு நிலைகுலைதல்’ என வரைவிலக்கணப்படுத்துகிறார். சாதாரண விருத்தி எனும் போது உடல், உள, மன எழுச்சிசார், நுண்மதிசார், சமூகம்சார் விருத்திகள்

நிலைகுலைதல் என்பதையேகுறிக்கின்றது. இன்றைய சூழலில் சிறுவர் துஸ்பிரயோகம் உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இது பல்வேறு நிலமைகளில் இடம் பெறுகின்றதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அவை குறித்து நோக்குவோம்.

முதலாவதாக குடும்பத்திற்குள்ளேயே சிறுவர் துஸ்பிரயோகம் இடம்பெறுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சிறுவர் என்பது18 வயதுக்குட்பட்டவர்களையே குறிக்கின்றது. இவர்கள் பொதுவாக தங்கி வாழ்பவர்களாகவே காணப்படுவார்கள். எனவே குடும்பத்தினுள்ளேயே உடல் சார்ந்த வன்செயல்கள் இடம்பெறுகின்றன. பிள்ளையின் உடல் பாதிக்கக் கூடிய வகையில் பெற்றோர் அல்லது குடும்ப உறுப்பினர் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றனர். குடும்பத்தில் பிள்ளையைப் புறக்கணிக்கும் நிலையும் இடம் பெறுகின்றது. இதனால் பிள்ளை துஸ்பிரயோகம் செய்யப்படுகின்றது. இவ்வாறு குடும்பத்திற்குள்ளேயே பிள்ளை துஸ்பிரயோகம் இடம் பெறுகின்றமை அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

இரண்டாவதாக சிறுவர் துஸ்பிரயோகம் இடம்பெறும் நிலையை எடுத்தால் குடும்பத்தில் நிகழும் பாலியல் துஸ்பிரயோகத்தை கூறலாம். குடும்ப உறவினர்கள் போன்றோர்களால் பாலியல் சம்பந்தமான தொடர்புகளால் சிறுவர்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுகின்ற நிலையை காணக்கூடியதாகவுள்ளது. குடும்ப அங்கத்தவர்கள், ஏனைய உறவினர்கள் சிறுவர்களை பாலியல் ரீதியான துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்குகின்றனர். குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் வீடுகளில் வேலைக்காரராகப் பணிபுரியப் தமது பிள்ளைகளை பெற்றோர் அனுப்புவது, அவ்வாறான சில சந்தர்ப்பங்களில் விபசாரத்திற்கு அவர்கள் பயன்படுத்தப்படுவதை பெற்றோர் அறிந்தும் கவனிக்காதிருத்தல் போன்ற செயல்கள் குடும்பத்திற்குள்ளேயே இடம்பெறுகின்றது. அத்துடன் பாலியல் ரீதியாக அல்லது உழைப்பு ரீதியாக பிறர் அவர்களைச் சுரண்டுவதற்கு இடம்கொடுத்தல் போன்ற நிலமைகளால் சிறுவர்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுகின்ற நிலை ஏற்படுகின்றது.

மூன்றாவதாக குடும்பத்தில் உளவியல், மன எழுச்சி சார்ந்த துஸ்பிரயோகம் இடம்பெறுவதைக் கூறலாம். அதாவது பிள்ளை மூலம் யதார்த்தத்திற்கு மாறான தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இழிவாகப் பேசி மனதைப் புண்படுத்துகின்றனர்.

நான்காவதாக நிறுவனங்களில் சிறுவர்கள் பல வகையிலும் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். வேலை செய்யும் நிறுவனங்கள் வேலைக்கேற்ற ஊதியம் கொடுப்பதில்லை. இதனால் அவர்கள் சுரண்டலுக்குள்ளாகின்றார்கள். அத்துடன் கடுமையான வேலைகளை கொடுத்தல், பாலியல் துஸ்பிரயோகம் என்பனவும் இடம்பெறுகின்றன.

ஐந்தாவதாக குடும்பத்தின் புறத்தே பிள்ளைகள் புறக்கனிக்கப்படுவதைக் கூறலாம். ஆபாசக் கேலிக்கதைகள் மூலமும், விபசாரம், உடல் உழைப்பு என்பவற்றின் மூலமும் சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்கின்றனர். இவ்வாறு சிறுவர்கள் பல்வேறுபட்ட நிலமைகளில் துஸ்பிரயோகம் செய்யப்படுகின்றார்கள்.

**சிறுவர் துஸ்பிரயோகத்தை ஒழிப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள்:**

இலங்கையில் இன்று சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்வது அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான சிறுவர் துஸ்பிரயோகம் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றதென்பதனை மேலே பார்த்தோம். இதேபோல் சிறுவர் துஸ்பிரயோகம் பல்வேறுபட்ட காரணிகளால் ஏற்படுகின்றது. அதாவது பொருளாதாரக் கஸ்டம், கலாசாரத் தாக்கம், சமூகமனப்பாங்குகள், மூலவளங்களுக்கான போட்டி, குடும்ப வன்செயல்கள், கொடூர பிள்ளை வளர்ப்பு முறைகள் போன்றன காரணமாகின்றன. எனவே சிறுவர்களின் துஸ்பிரயோகத்தைத் தடுக்க இலங்கை அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவை குறித்து நோக்குவோம்.

சிறுவர் துஸ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்காக இலங்கை அரசு பல சட்டங்களை இயற்றியுள்ளது. சிறுவர்களின் துஸ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான சட்டவாக்கம் ஏற்கெனவே இருந்திருக்கின்றது. 12 வயதுக்கு உட்பட்ட பிள்ளை, பெற்றோரால் கைவிடப்பட்டால் அபராதத் தண்டனைக்கு உட்படுவர். புதிய திருத்தங்களையுடைய தண்டனைக் கோவையில் சிறுவர்களை இம்சைப்படுத்தல், முரட்டுத்தனமாகத்தாக்குதல், புறக்கணித்தல், கைவிடுதல், கடத்துதல் என்பன தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்படுகின்றன. ஆபாச வெளியீடுகள் பற்றிய கட்டளைச் சட்டமும் பிள்ளைகளும், இளைஞர்களும் என்ற சட்டமும் அத்துடன் தண்டனைக் கோவையும், சிறுவர்களுக்குக் கெடுதி விளைவிக்கக் கூடிய ஆபாச வெளியீடுகளைக் கருத்திற் கொள்கின்றன. இதேபோன்று எவரேனும் சித்திரவதைக்கோ வேறெந்த குரூரமான மிருகத்தனமான நடத்தைக்கோ மானபங்கமேற்படக்கூடிய நடத்தைக்கோ, தண்டனைக்கோ உட்படுத்தப்படலாகாது என நடைமுறையில் உள்ள இலங்கை அரசியல் யாப்பின் உறுப்புரை 11 உறுதிமொழியளிக்கின்றது.

இதேபோன்று துஸ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு, சிறுவர் நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துக்கு உரியது. சிறுவர் துஸ்பிரயோகத்தினைத் தடுப்பதற்காக, தற்போதுள்ள நடவடிக்கைத் திட்டங்களைச் சீர்திருத்தவும், புதிய திட்டங்களை வகுக்கவும் 'இலங்கைச் சிறுவர்களுக்கான நடவடிக்கைத் திட்டம்' என்னும் அமைப்பு இடமளிக்கின்றது.

சிறுவர் துஸ்பிரயோகம், பெண்கள் மீதான வன்செயல்கள் தொடர்பாக தேசிய பொலிஸ் நிலையப் பிரிவுகளும் இப்புதிய திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இது சிறுவர் துஸ்பிரயோகம் சம்பந்தமான பொலிஸ் நடவடிக்கைகளையும் சட்ட அமுலாக்கலையும் கண்காணித்து வருகின்றது. இச்செயல் துஸ்பிரயோகத்திற்கும், பழிக்கும் உட்பட்ட சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட ஓர் முக்கிய முயற்சியாகும்.

தண்டனைக் கோவையின் இன்னோர் சமீபகாலச் சீர்திருத்தம் யாதெனில், சிறுவர் துர்ப்பிரயோகத்தின் தன்மையினையும் பரப்பினையும் விரிவாக்கியதாகும். இக்கோவையில் புதிய குற்றங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குறைந்தபட்சத் தீர்ப்பு என்ற கருத்து சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் தொழிலில் சேர்க்கப்படுவது முற்றாகத் தடுக்கப்படுகிறது. 12 – 14 வயதுகளுக்கு உட்பட்ட பிள்ளைகள் குறிக்கப்பட்ட சில தொழில்களைச் செய்ய முடியும். அதாவது,வீட்டு வேலைகள், ஆனால், அப்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். அத்துடன் ஓய்வு நேரங்களைக் கொடுக்கவும் வேண்டும்.

கடைகளில்,காரியாலயங்களில், தொழில் நிலையங்களில் பிள்ளைகளை வேலைக்கு இணைத்துக் கொள்வதற்கான மிகக்குறைந்தபட்ச வயதெல்லை 14 வயதாகும். குடும்பத் தொழில் நடவடிக்கைகளில் அல்லாது வேறு எந்தத் துறையிலும் சேவையில் சேர்ப்பதற்கான மிகக் குறைந்தபட்ச வயதெல்லை 15 எனவும், சுரங்க வேலைகளுக்கு மிகக் குறைந்தபட்ச வயதெல்லை 16 வயதெனவும் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிறுவர் உழைப்பை நீக்கவும், தடுக்கவும் சமூக நலன் அமைச்சினால் (1992) நியமிக்கப்பட்ட தொழில்நுட்பச் செயற்குழு அதிகளவான நிர்வாக மாற்றங்களையும், சட்ட ஆக்க மாற்றங்களையும் பிரேரணை செய்துள்ளது.

தேசியத் தொழிலாளர் சாசனத்தின்படி (1995) பிள்ளைகளைக் கைத்தொழில்களிலும், வீட்டுச் சேவைகளிலும் அமர்த்துவதை சட்டப்படி தடுப்பதற்கு அரசு கடமைப்பட்டுள்ளது. இவ்வாறு நாடுகளினால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள், சட்டவாக்கம், அரசியலமைப்பில் பாதுகாப்பு நிபந்தனைகள் இடம் பெறல், கட்டுப்படுத்தும் ஒழுங்குமுறைகள், பராமரிப்பு நிலைய வசதிகள், வேறு பரிகார முறைகள், கல்வித் திட்டங்கள் வகுத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை சிறுவர் துஸ்பிரயோகத்தை ஒழிப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளாகும்.

**சிறுவர் துஸ்பிரயோகத்தை ஒழிப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்:**

சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக இலங்கை அரசு பல்வேறு சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. இவ்வாறு சிறுவர் துஸ்பிரயோகத்திற்கெதிராக அரசு பல நடவடிக்கைகள் எடுத்தும் சிறுவர் துஸ்பிரயோகம் இலங்கையில் குறைந்தபாடில்லை. அதனால் இலங்கை

அரசால் இதனை முற்றாக நீக்க முடியாமல் உள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.இருந்தபோதிலும் இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பலவாகும். அவை எந்தளவுக்கு வெற்றியளித்துள்ளன என்பதை இங்கு நோக்குவோம்.

சிறுவர்கள் எனக் கருதப்படுபவர்கள் அனைவரும் கட்டாயம் கல்வியைப் பெறவேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டுவந்ததுடன், சிறுவர்களை வேலைக்கமர்த்தப்படுவதை தடை செய்யும் சட்டத்தையும் கொண்டு வந்தது. ஆனால் சிறுவர் வேலைக்கமர்த்தல் மற்றும் சுரண்டல் என்பன இன்றும் இருந்து கொண்டே வருகின்றன.

குடும்ப உறவினர்களால் இடம்பெறும் சிறுவர் துஸ்பிரயோகம் மறைக்கப்படுகின்றன. குடும்பம் அந்தரங்கத்தைக் காக்கும் புனிதமான ஓர் சுதந்திர அமைப்பெனச் சமூகம் கருதுவதால், தகாப்புணர்ச்சி போன்ற துஸ்பிரயோகங்களை குடும்பத்தால் மறைக்க முடியும். இதனால் இவை வெளிவராமல் போகின்றன. எனவே அரசால் இவற்றுக்கெதிராக இயற்றப்பட்ட சட்டங்கள் முற்றுமுழுதாக வெற்றியளிக்காமல் போகின்றது.

சிறுவர்களை துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்குபவர்களில் சிலர் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் சமூக செல்வாக்கு பெற்றவர்களாக காணப்படுவதால் சட்டத்தால் தண்டிக்கப்படுவதில்லை. இவ்வாறானவர்கள் மறைக்கப்பட்டு விடுகின்றனர். மேலும் தண்டனைக் கோவையின் சமீபகாலத் திருத்தங்களில் அபராதங்களைக் அதிகரித்துள்ளது. குற்றவாளிகள் மீது விதிக்கப்பட்ட இந்த அபராதங்கள் மூலமும் அவர்களைத் திருத்த முடியாமல் உள்ளது.

சிறுவர் துஸ்பிரயோகத்தை எதிர்க்கக்கூடிய சமூக மனச்சாட்சியின் பலவீனம், இடர் நிலையிலுள்ள பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கத்தக்க சட்டமின்மை. இவை போன்ற காரணங்களால் சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் முற்றுமுழுதாக வெற்றியடையாமல் போகக்கூடிய நிலை ஏற்படுகின்றது.

பல காரணங்களால் திருத்தமான தகவல்களைப் பெற முடியாதுள்ளது. சட்டத்திற்கு மாறாகப் பிள்ளைகளைத் தொழிலில் சேர்ப்பதனால் புள்ளிக் கணக்கெடுப்புகளில் வேலை செய்யும் பிள்ளைகள் சேர்க்கப்படுவதில்லை. வாரத்தில் பல மணி நேரம் அல்லது தினமும் வேலை செய்யும் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்பவர்களாயின் ‘பாடசாலைப் பிள்ளைகள்’ என்றே கணக்கெடுப்புக்களில் பதியப்படுகின்றனர். அத்துடன் சிறுமுயற்சிகளிலும், வீடுகளிலும் பொழுது போக்குத் தொழில்களிலும், வீதியோர வேலைகளிலும் ஈடுபடும் பிள்ளைகளைப் பற்றிய தகவல்களைப் பெறுவது மிகவும் கடினமாகும்.

துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர்களுக்கான நன்நடத்தை நிலையங்கள், உதவி நிறுவனங்கள் பற்றிய அறிவு இல்லாமையால் மேலும் துஸ்பிரயோகத்திற்குள்ளாகின்ற நிலையும் ஏற்படுகின்றது. எனவே நிலையங்கள், நிறுவனங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் வேண்டும்.

ஆகவே சிறுவர் தொடர்பாக இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகள் ஓரளவு வெற்றியடைந்தாலும் முற்றுமுழுதாக சிறுவர் துஸ்பிரயோகத்தை ஒழிக்க முடியாத நிலையே காணப்படுகிறது.எனவே இதற்கு மேலும் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் சிறுவர் உரிமைகளை பாதுகாக்கலாம். எனவே மேற்கூறியவற்றை நோக்குமிடத்து சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகளால் ஓரளவு குறைக்கக்கூடியதாக இருந்ததுடன் முற்றுமுழுதாக ஒழிக்க முடியாத நிலை காணப்படுவதாகவே கூறமுடிகிறது.

**சிறுவர் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்:**

சிறுவர் உரிமை தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய குழுக்கள் அதற்கான காரணங்கள் என்பவற்றை அறிந்து கொள்வது அவசியமாகும். அவை குறித்து நோக்குவோம்.

சிறுவர் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பிடத்தக்க குழு பிள்ளைகளே ஆவர். பிள்ளைகளுக்கு அவர்களின் உரிமைகள் பற்றிய உணர்வை ஊட்டிவிட்டால் அவர்கள் தமது உரிமைகளைப் பேணிக்காப்பதில் ஒரு குழுவாகச் சுறுசுறுப்பாகச் செயற்படுபவர். நீண்ட கால நோக்கில் சிந்திக்கும்போது இன்றைய சிறார்க்கு சிறுவர் உரிமைகள் பற்றி அறிவூட்டினால் மட்டுமே அவ்வுரிமைகளை உறுதிப்படுத்த முடியும். இதேபோன்று பெற்றோர், ஆசிரியர்கள், தொடர்பூடக பணியினர், சமூகம், சிறப்புக்குழுக்கள் போன்ற குழுக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பெற்றோர்கள் மத்தியில் சிறுவர் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்,உடல் ஊனமுற்ற, மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள், வேலைக்காக அமர்த்தும் சிறுவர்கள், கைவிடப்பட்ட பிள்ளைகள், போரினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் போன்ற இத்தகைய பிள்ளைகளின் உரிமைகளைப் பேணிக்காக்க சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியமாகும்.இவ்வாறானவர்களின் பெற்றோர் படிப்பறிவில்லாதவர்களாக அல்லது குறைந்த கல்வியறிவு உடையவர்களாக இருப்பதால் அவர்களுக்கு சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும். ஏனெனில் எந்தச் சமூகத்திலும் நிகழும் பிள்ளைகளைச் சுரண்டல், பிள்ளைகளை இழிவுபடுத்தல், அல்லது துஸ்பிரயோகம் செய்தல் என்பன வறுமை, பெற்றோரின் தாழ்மட்டக்கல்வியறிவு என்னும் இரு காரணங்களின் விளைவாக, உரிமைகள் குறைந்த சமூகங்களிலே அல்லது சமூகப்பிரிவுகளிலேயே காணப்படுகின்றன. இதனால் பிள்ளைகள் உரிமைகள் இவ்வகைப் பெற்றோருக்குக் கடைசியாகவும், குறைவாகவுமே

சென்றடைகின்றன. இதனால் இவர்களுக்கு சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும்.

பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய குழு ஆசிரியர்களாவர். இவர்கள் தகவல் ஏற்போராகவும், வழங்குவோராகவும் உள்ளனர். ஒரு சிறுவர் வாழ்வின் பெரும்பகுதி பாடசாலை செல்லும் பிள்ளையாயின் பாடசாலையில் ஆசிரியர்களுடன் கழிகின்றது. பாடசாலையில் கழிக்கும் நேரத்தின் அளவு, பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நிகழும் ஊடாட்டத்தின் அளவு என்பன காரணமாக அவர்களிடையே பரஸ்பர நம்பிக்கை வளர்க்ப்படல் ணேடும். அத்துடன் பிள்ளைகள் தமது அடிப்படை உரிமையான கல்வி கற்றலை அவர்களின் ஏனைய உரிமைகளை மீறாதவாறு உறுதிப்படுத்த வேண்டியது ஆசிரியரின் பொறுப்பு. ஒரு பிள்ளை கற்றலில் ஈடுபடுவதை நிர்ப்பந்திப்பதற்காக ஆசிரியர் ஒருவர் நிந்தனை, குத்தல், நையாண்டி, சரீரத்தண்டனை என்பவற்றை மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய நிலமையில் சிறுவர் மனவெழுச்சியின்உறுதிப்பாட்டைப் பாதிக்கும் பாதகவிளைவுகள் அது பெறும் கல்வியின் நலங்களை முற்றாய் ஒழித்துவிடும்.

பெற்றோர் தமது பிள்ளைகள் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்வதற்கு முன்னுரிமை வழங்கும்படி சிறப்பாக ஆசிரியர்கள் மீது அழுத்தம் கொடுக்கும் போது விளையாட்டு, ஓய்வு, நுண்கலைச் செயற்பாடுகளில் ஈடுபடல் போன்ற பிற உரிமைகளைக் கல்வி மீறாதவாறு அவற்றிடையே ஒரு சமநிலையைப் பேணுந் திறனை ஆசிரியர்கள் ஏற்படுத்தல் வேண்டும். மற்றும் இயல்பு நிலைப்பிள்ளைகளோடு சிறப்புத் தேவையுள்ள ஒருங்கே பயிலும் போக்கு காணப்படும் பாடசாலை ஆசிரியரின் பணி சிரமமானது. எனவே,பிள்ளைகள் யாவருக்கும் தமது கவனிப்பும், பராமரிப்பும் உரிய அளவிற் கிடைக்கக் கூடியதாகத் தீர்மானங்களை எடுப்பவராய் ஆசிரியர் இருத்தல் வேண்டும். அத்துடன் வகுப்பிலுள்ள சிறுவர், சிறுமியர் ஆகிய இருசாராரையும் நடத்தும் முறையில் சமத்துவத்தை கடைப்பிடிப்பவர்களாக ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும்.

பிள்ளைகளின் அவதுாறு அல்லது துஸ்பிரயோகப் பாதிப்புப் பிரச்சினைகள் தொடர்பான உணர்வுடைமையை ஆசிரியர்களிடம் நிலை பெறச் செய்யவல்ல பயன்தரும் நுண்முறைகள் பிள்ளைகளின் உரிமைகளைப் பேணிக்கொள்ளவும் பாதுகாக்கவும் துணைபுரியக்கூடியவாறு பயன்படுத்துவதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும். எனவே சிறுவர் உரிமைகள் தொடர்பாக ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் ஆசிரியர்கள் மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துபவர்களாக இருத்தல் வேண்டும்.

சிறுவர் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய குழுவாக தொடர்பூடக ஆளணியினர் உள்ளனர். தகவல் ஏற்போராகவும், வழங்குவோராகவும் இவர்கள் உள்ளனர்.

அவர்கள் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பாக விழிபுணர்வை ஏற்படுத்த வேண்டுமெனின், அவர்களுக்கு சிறுவர் உரிமைகள் என்னும் விடயம் பற்றிய அறிமுகப் பயிற்சியும், கல்வியறிவும் அளிக்கப்படல் வேண்டும். ஊடகத்துறை ஆளணியினருக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான பரிச்சயம் அல்லது அறிமுகம், அவை தொடர்பான அத்துமீறல்களை முற்றாய் ஒழிக்காவிட்டாலும் சிற்றளவுக்குக் குறைப்பது எவ்வாறு என்பன குறித்து விளக்கமளிக்கும் தேவை ஏற்பட்டுள்ளது. இதன் மூலமே சிறுவர் உரிமைகள் தொடர்பான முறையான விழிப்புணர்வை இவர்களால் ஏற்படுத்த முடியும். ஊடகத்துறை ஆளணியினரிடம் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பெருவழக்கிலுள்ள அச்சுருவ வெளியீடுகள், வானொலி, என்னும் ஊடகங்கள் என்பவற்றுடன் ஒளிப்பதிவுப் பொருட்கள், படச்சுருள்கள், என்பனவும் உயர்மட்டப்பயன் தரும் ஆற்றலுடையன ஆகும். பின்னர் இத்தகைய பொருள்களை சிறுவர் உரிமைகள் பற்றிய தகவல்களை வழங்க ஊடகத்துறை ஆளணியினர் பயன்தரும் முறையில் காலத்தாழ்வு இல்லாமல் பயன்படுத்த முடியும். இவ்வாறு ஊடகத்துறையினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

இவை தவிர தனிநபர்கள் தாங்கள் சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற உணர்வுடன் சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்தவும், அவ்வுரிமைகளின் எல்லை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கவும் உதவும் வகையில் சிறுவர் உரிமைகள் பற்றிய நிகழ்ச்சித் திட்டங்கள் சமூக உணர்வை ஒருமுனைப்படுத்த வேண்டும். எனவே சிறுவர் உரிமை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டிய ஒன்றாக சமூகமும் இடம்பெறுகின்றது. ஒரு சமூகம் எத்தகையது நகரத்திற்குரியது, கிராம்திற்குரியது. அல்லது ஒதுக்குப்புறமானது என்பதைக் கருத்திற்கொள்ளாமல் சிறுவர் உரிமைகள் பற்றிய செய்திக் கூற்றுக்களுக்கு போதிய விளம்பரம் அளித்தல் அவசிய தேவையாகும். இத்தகைய செய்திக் கூற்றுக்கள் பொதுமக்கள் கூடுகின்ற பொதுவிடங்களான கடைகள், கூட்டுறவு அங்காடிகள்,சந்தைகள், சனசமூக நிலையங்கள், கல்வி நிலையங்கள், பாடசாலைகள், பஸ்தரிப்பிடங்கள், புகைவண்டி நிலையங்கள் என்பவற்றில் கண்ணைக் கவரும் கருத்துப் படங்கள் கொண்ட சுவரொட்டிகள் மூலம் காட்சிக்கு வைக்கப்படவேண்டும்.

குறிப்பாக, கிராமங்களிலே விளக்கத்திரை நிகழ்ச்சிகள், தெருக் கூத்துக்கள், நாடகங்கள் என்னும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளைப் பிள்ளையின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு அல்லது அறிவு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் இணைத்துக்கொள்வதன் மூலம் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். இவை மட்டுமன்றி பிற சிறப்புக் குழுக்களுக்கும் சிறுவர் உரிமை தொடர்பாக விழப்புணர்வை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும். சமுதாயத்தில் சிலர் பல்வேறு பாத்திரங்களை வகுப்பவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் உள்ளுர், பிராந்திய,

தேசிய மட்டங்களில் தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது செல்வாக்கு அல்லது அதிகாரம் செலுத்தக்கூடியவர்களாக காணப்படுவர். இவர்களின் அர்ப்பணிப்பும் ஆதரவும் அனைத்துப் பிள்ளைகளின் உரிமைகளுக்கும் உத்தரவாதம் அளிப்பதை நோக்கமாகக் கொண்ட எந்தத் தந்திரோபாயத்தையும் பயன் தரும் வகையில் அமுல் செய்ய பெரிதும் அவசியமாகும். ஏனெனில் நேர்மையற்ற தனியார்கள் பிள்ளைகளின் உரிமைகளை பறிக்க முயலலாம். எனவே இவ்விடயத்தில் ஏற்படக்கூடிய தாக்கத்தை கருத்திற்கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். மேற்கூறப்பட்ட குழுக்களுக்கு சிறுவர் உரிமை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.

**விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் வெகுஜன ஊடகங்கள்:**

சிறுவர் உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பல்வகைப்பட்ட வெகுஜன ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், தெருக்கூத்துக்கள் போன்றனவாகும். அவை குறித்து நோக்குவோம்.

வானொலி மூலம் நாடகங்கள், விளம்பரங்கள் மூலம் சிறுவர் உரிமை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். தொலைக்காட்சி பயனாற்றல் மிக்க அம்பலப்படுத்தியாகும். ஏனெனில்,கட்புலத்தின் தாக்கம் சக்திவாய்ந்ததாக இருக்கும். இவ்விடயம் பற்றி கலந்துரையாடல்களையும், நீண்ட தெளிவூட்டல்களையும் விட நாடகநுட்பங்கள் பரந்த கவர்ச்சியை ஊட்டலாம். சிறப்பாக தொலைக்காட்சி நாடகங்கள் உண்மையான வாழ்க்கையனுபவங்கள் பற்றிய கற்பனையாற்றல் வெளிப்படும் மீள்படைப்புக்கள் மூலம் செய்தியை வழங்குவதில் பயன்தரும் சக்திவாய்ந்தவையாகும். தெரு வாழ்க்கைப் பிள்ளைகள் அனுபவிக்கும் இன்னல்கள், இடுக்கண்கள் அவர்கள் பாதாள உலக நரக வாழ்விற்கு வசீகரிக்கப்படும் விதம், அவர்கள் திருட்டுக்கள், அருவருப்பான பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படல் பிற தொனிப் பொருள்கள் என்பன தொலைக்காட்சி நாடகங்களில் தத்ரூபமாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

தொலைக்காட்சிகளில் வீட்டுப் பணிப்பிள்ளைகளுக்கு இழைக்கப்படும் கொடுமை, பாடசாலைகளில் பிள்ளைகளின் வரவின்மை பற்றிய உன்னத படைப்புக்கள் சிலவற்றை ஒளிபரப்பியுள்ளது. அத்துடன் உணர்வூட்டும் விளக்கவுரைகள், குறுந்திரையில் பளிச்சிடும் சிறு செய்திகள் என்பன மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். இவ்வாறு தொலைக்காட்சி சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதேபோன்று பத்திரிகைகள் விழிப்பணர்வை ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் முக்கிய ஊடகமாகும். சிறுவர் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் பிரசாரம் செய்தல் வேண்டும். அத்துடன் சிறுவர் உரிமைகள் அவற்றோடு தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிய

கட்டுரைகள் வாசகரை அதிகம் கவரும் வகையியல் கூடுதலான இடைவெளிகளில் பிரசுரமாக ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் விழிப்பணர்வை ஏற்படுத்தமுடியும்.

நிழற்படங்களுடன் கூடிய சொல் அலங்காரங்கள், இருவர் உரையாடல் போன்ற புதுமை புகுத்தும் தயாரிப்பு நுட்பங்கள் (சிறுவர் நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும் தகவலாய்வு நிருபருக்கும் இடையே நிகழும் இருவர் உரையாடல்) பாதிப்புற்றோரின் வரலாற்றுக் கட்டுரைகள், போன்றவற்றைப் பற்றி எழுதுவதன் மூலம் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.
உண்மை வாழ்க்கைச் சம்பவங்கள், சிறுவர்கள் துஸ்பிரயோகப்படுத்தப்படுவதற்கான காரணிகள், இடங்கள் போன்ற விடயங்களை எடுத்துக்கூறுவதுடன் இதனால் ஏற்படும் பாதகங்கள் பற்றியும் எடுத்துக்கூறப்படுதல் வேண்டும். மேலும் சிறுவர்களின் உரிமைகள் மறுக்கப்படுமிடத்து எடுக்கப்படும் நடவடிக்கைகள், சட்டங்கள் தொடர்பாகவும் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படுவதால் விழிப்புணர்வை ஏற்படுத்த பத்திரிகை பயன்படுகின்றது.

பிள்ளை தொடர்பான துஸ்பிரயோக நிகழ்வுகளைக் கண்காணிக்க அமைக்கப்படும் விழிப்புக்குழுக்கள், குற்றம் இழைப்பவர்களைச் சட்டத்தின் பிடிக்குள் திணித்துவிடுவதுடன் இழைக்கப்பட்ட சட்ட விரோதக் கொடூரங்களையும் அவற்றின் வழிமுறைகளையும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அம்பலப்படுத்துவதன் மூலம் சிறுவர் துஸ்பிரயோகம் செய்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கையினை ஏற்படுத்த முடியம்.

படிப்பறிவு இல்லாத ஏழைகளும் புரிந்துகொள்ளும் விதத்தில் துண்டுப்பிரசுரங்கள், சித்திரங்கள் என்பவற்றை பொது இடங்களில் காட்சியளிக்க வைத்தல். இதனால் தமது சொந்தப் பிள்ளைகளின் அசைவுகளை பெற்றோர் மிக அதிக கவனத்தோடு கண்காணிக்கத் தூண்டப்படுவர். அதனால் குடும்ப வருமானத்தின் பற்றாக்குறையை நிரப்பச் சுலபமாகப் பணம் சம்பாதிக்கத்தூண்டும் கவர்ச்சி அவர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளைக் கண்டு கொள்ளாது இருக்கும் குருட்டுத்தனத்திற்கு ஆதரவு அளிக்காது. இந்தச் செய்திகளும் விளக்கப்படங்களும் மக்கள் கூடும் (திரளும்) இடங்களான சந்திகள், அஞ்சல் அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள், பேருந்து தரிப்பிடங்கள்,பொதுக்கிணறுகள் போன்ற இடங்களில் காட்சிக்கு வைக்கப்படுவதன் மூலம் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுகின்றது.

சிறு விளம்பரங்கள், தெருக்கூத்துக்களும் விழிப்புணர்வை ஏற்படுத்தப்பயன்படுகின்றன. தெருக்கூத்து இச்செய்திகளை வழங்கும் கருவியாகப் பயன்படுத்தலாம். இப்பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைக் காண நின்றுவிடும் ஒருவர் இறுதியில் அதன்மூலம் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வை பெற்றுக்கொள்கின்றார்.

இவ்வாறு பத்திரிகை, விளம்பரங்கள், சித்திரங்கள், தெருக்கூத்துக்கள் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.எனவே தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, துண்டுப்பிரசுரங்கள், தெருக்கூத்துக்கள் போன்ற தொடர்பு ஊடகங்கள் மேற்கூறியவாறு சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

**முடிவுரை:**

இன்றைய சூழலில் சிறுவர் துஸ்பிரயோகம் உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றமை வெளிப்படையாகும். இது பல்வேறு நிலமைகளில் இடம் பெறுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களின் துஸ்பிரயோகத்தைத் தடுக்க இலங்கை அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.சிறுவர் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டாயத் தேவை எழுந்துள்ளது. சிறுவர் உரிமை தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய குழுக்கள் அதற்கான காரணங்கள் என்பவற்றை அறிந்து அவர்களுக்கிடையே விழிப்புணர்வு திட்டங்களை செயற்படுத்தவேண்டியது அவசியமாகும். அதற்காக வெகுஜன ஊடகங்களை அதிகமாக பயன்படுத்தலாம். ஏனெனில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் வெகுஜன ஊடகங்களின் வகிபாகம் மிக அதிகமானதாகும்.

**உசாத்துணை:**


[1] கருணாநிதி, மா. (2007). 'பிள்ளையின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பக் காரணிகள்'அகவிழி, விழி- 03, பார்வை- 31. அகவிழி வெளியீடு, இலங்கை.

[2] பிரவாகினி, (2006). 'வீட்டு வேலைக்கு வேண்டாம் சிறார்கள்' சிறுவர் உரிமைகள் பெண்கள் கல்வி நிறுவனம், இலங்கை.

[3] பிறேமா, கௌ. (2014). 'சிறுவர் உள நலமும் பெற்றோரும்'குருத்தோலை- சிறுவர் தின முதியோர் வார சிறப்பு மலர்,மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம், மட்டக்களப்பு.

[4] லோகேஸ்வரன், ஆர். (2008). 'கற்றலைப் பாதிக்கும் காரணிகளும் பெற்றோரும்'அகவிழி. அகவிழி வெளியீடு,இலங்கை.

[5] விஜிதரன், ஏ. (2014).'இயங்கு நிலை சமூகத்தை சீர்குலைக்கும் இடைவிலகல்'குருத்தோலை - சிறுவர் தின முதியோர் வார சிறப்பு மலர்இ மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம், மட்டக்களப்பு.

[6] ஜெகநாதன்.சோ. (2007). 'பொறுப்பற்ற பெற்றோர்களினால்தான் பிள்ளைகள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்'மொட்டுக்கள் -02,சிறுவர் தின, முதியோர் வார சிறப்பு மலர். CCF SRI LANKA.

[7] ஹரேந்திர, டி.சில்வா, டீ.ஜீ. (2011). 'சிறுவர் நலன் பேணலும்.சுற்றுலாத்துறையும்'பொருளியல் நோக்கு,மத்திய வங்கி வெளியீடு, இலங்கை.

[8] Child Poverty In Srilanka, (2008). Chiristian Child Fund Child Poverty In Srilanka.

[9] கல்வி,(2002). சிறுவர்கள் உரிமைகள் பற்றிய சமவாயம். யுனிசெவ், இலங்கை.